<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.</u>

<u>அ.வ.எண். **33/2014**</u>

2024-ம் ஆண்டு ஜுன் திங்கள் 20-ம் நாளன்று வாதி/பிரதிவாதி சாட்சியாக பி.வா.சா.2-வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.N.அன்பழகன், இருக்கை எழுத்தர் நிலை I அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | : குணசேகரன் | தொழில் | : |
| த/பெ. | : | வட்டம் | : |
| முகவரி | : | மதம் | : |
| ஜாதி | : | வயது | : |

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் கரூர் மாவட்டம், வெங்கமேடு காவல்நிலையத்தில் 2011 ம் வருடத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். நான் வெங்கமேடு காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த காலத்தில், தெய்வாணை என்பவர் கரூர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 06.06.2011 அன்று ஒரு புகார் மனு கொடுத்திருந்தார். அந்த புகாரில் அவருடைய மகனை கடத்தி விட்டனர் என சொல்லியுள்ளார். அந்த புகார் மாவட்ட காவல் கண்காணிப்பாளரால் வெங்கமேடு காவல் ஆய்வாளரான எனக்கு விசாரணைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த மனுவின் பேரில், 09.07.2011 அன்று நான் விசாரணை செய்தேன். அந்த மனுவில் கடத்தப்பட்ட சொல்லப்படும் கோகுல் என்பவர் நிலையம் ஆஜராகியிருந்தார். அவரை நான் விசாரித்தேன். புகார் கொடுத்த தெய்வானை என்பவரையும் நான் விசாரித்தேன். அந்த விசாரணையில் கோகுல் என்பவர் தன்னை கடத்தவில்லை என வாக்குமூலம் கொடுத்தார். அதை நான் பதிவு செய்தேன். தெய்வானை என்பவரும் புகார் மீது நடவடிக்கை எடுத்ததற்கு நன்றி என எழுதிக்கொடுத்தார். கோகுல் என்பவரை கடத்தவில்லை எனவும் தெய்வானை வாக்குமூலம் ..........

கொடுத்தார். கோகுல் என்பவரும், தெய்வானை என்பவரும் கொடுத்த வாக்குமூலங்களை நான் பதிவு செய்தேன். அந்த புகாரின் முடிவில், கோகுலை பிரபு என்பவர் கடத்தவில்லை என்று வாக்குமூலம் கொடுத்ததால், அந்த புகாரை முடித்து வைத்தேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 தகவல் அறியும் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஆவணத்தில் புகார் விசாரணை செய்த வாக்குமூலங்கள், புகார் விசாரணை முடிவு ஆகியவற்றின் நகல்கள் உள்ளது. அதில் புகார் விசாரணை முடிவில் நான் கையொப்பம் செய்துள்ளேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

புகார் தனது மகனை கடத்திவிட்டார் என மட்டும் கொடுக்கப்பட்டுள்ளதா அல்லது சொத்து சம்மந்தமாகவும் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் சொத்துக்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. புகாரில் கோகுல் என்பவரை வளர்ப்பு மகன் என குறிப்பிட்டுள்ளார். புகார் கொடுத்து ஒருமாதம் கழித்து விசாரணை துவங்குவதற்கு என்ன காரணம் என்றால் கோகுல் என்பவரை கண்டுபிடித்து வருவதற்கு காலதாமதம் ஆனது. விசாரணையின்போது, கோகுலை தவிர வேறு நபர்கள் இருந்தனரா என்றால் அவரை சிலர் அழைத்து வந்தனர். என்னுடைய விசாரணையின்போது இரண்டு வழக்கறிஞர்கள் இருந்தனர். விசாரணையின்போது, கோகுலின் நடவடிக்கை எப்படி இருந்தது என்றால் பதட்டமாக இருந்தார். அவர் மதுபோதையில் இருந்தார் என்றால்அவ்வாறு கூற முடியாது. அவர் தெளிவாக இல்லை என்று சொல்ல முடியாது. விசாரணையில் கோகுல் தெளிவாக பதில் கூறினாரா என்றால் அவர் வழக்கறிஞர் கூறியதை கூறினார். எந்த கேள்விக்கும் அவர் நேரடியாக பதில் சொல்லவில்லை. கோகுல் என்பவரிடம் விசாரணை தேதிக்கு முந்தைய தேதியில் மூன்று கிரய ஆவணங்கள் ஏற்படுத்தியது சம்மந்தமாக கூறினாரா என்றால் அவர் கூறவில்லை. தெய்வானை, அவரது மகன் சொத்தை எழுதி வாங்கிவிட்டார்கள் என கூறினார். விசாரணை வாக்குமூலத்தை என் முன்னர் எழுதி கையெழுத்திட்டனரா என்றால்

கோகுல் என்பவரும், அவர் அம்மா தெய்வானை என்பவரும் எழுதி வைத்திருந்த வாக்குமூலங்களை என்னிடம் கொடுத்தனர். எனக்கு மேல்இடத்திலிருந்து அழுத்தம் வந்த காரணத்தினால்தான் நான் தெய்வானை கொடுத்த புகாரின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் காவல் கண்காணிப்பாளரிடமிருந்து வந்த புகார் என்பதால் அதை மிகவும் கவனமாக பார்க்குமாறு கூறினார்கள். தெய்வானை கொடுத்த புகார் மீது நான் உரிய விசாரணை செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.